True Copy.
Editor

Registered as a Newspaper at the G. P. O.

# ஜனதர்ம போதினி

ஒன்றே குலனும்
ஒருவனே தெய்வமும்.
"திருமூலர்"

# JANA DHARMA BOTHINY

OR

## NEW JAFFNA

A Monthly Newspaper

"சமன்செய் சீர்தூக்குங்கோல்போலமைந்தோருபாற்
கோடாமை சான்றோர்க்கணி."

| சந்தா விளம்பரம் | |
|---|---|
| தபாற்செலவின்றி ௵ ஒன்றுக்கு ரூ. | 1.00 |
| தபாற்செலவிட்பட ,, ,, ,, | 1.25 |
| மலாய்நாட்டிற்கு ,, ,, ,, | 2.00 |
| வி. பி. சார்ஜ் பிரத்தியேகம் | |
| சந்தாப்பணம் முற்பணமாகவே அனுப்பவேண்டியது. | |

| விளம்பர விகிதம் | | | | |
|---|---|---|---|---|
| 1 | கலம் | முதன்முறை | ரூ. | 5.00 |
| ¾ | ,, | ,, | ,, | 4.00 |
| ½ | ,, | ,, | ,, | 3.00 |
| ¼ | ,, | ,, | ,, | 2.00 |

அடுத்தமுறைகளில் அரைவாசி.
சில்லறை விளம்பரங்களுக்கு முற்பணங்கட்ட வேண்டும்.

புத்தகம்—1, } யாழ்ப்பாணம்—தெல்லிப்பழை-பிரமோதூத ௵ ஐப்பசி ௴ (1930 ஒக்ரோபர்.) { இலக்கம்—6.

## புதினக்குறிப்புகள்

### வழமைப்படி நட்டுவமேளம்

கோண்டாவிற் பள்ளர் அநேக காலமாய் நட்டுவ மேளவாத்தியம் பாவிப்பது வழக்கம். மானம்பூ வன்று வழமைபோல ஒரு கோவிலிலிருந்து மற கோவிலுக்கு மேளவாத்தியத்துடன் ஊர்வலம் போவதைத் தடுக்கும் எண்ணத்துடன் வேளாளரால் எசண்டருக்குப் பெட்டீசமெழுதப்பட்டிருந்தது. வழமைப்படி செய்யும்படி மணியகாரனவர்களும் கட்டளையிட்டார். அந்த நேரம் கலகமுண்டாகுமெனவும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனல் ஒடுக்கப்படுந் தமிழர் சங்க விகிதரின் ஆலோசனையுடன் வழமைபோல மேள வாத்தியத்துடன் அமைதலாகச் சுற்றுப்பிராகாரம் முற்றுப்பெற்றது.

### கோவியப்பெண்ணின் தாலிக் கலிபிலி

தனங்கிளப்பிற் கோவியப்பெண்ணைத் தாலி கட்ட விடமாட்டோமென்று வேளாளர் செய்த கலிபிலியால் இந்தமாசம் முதலாங் கிழமையிற் கலகமுண்டானது. வேளாளரைப் பிடிக்கும்படி சென்ற பொலிஸ்மார் சிலரையகப்படுத்தி விளக்கமறியலில் விட்டிருந்தனர். இவ்வழக்குச் சாவகச்சேரிக் கோட்டில் விளங்கப்படும். இது கோவியப் பெண்கள் வேளாளரினுங் குறைந்த சாதியென்றும், அதால் நகையணிதல் முதலிய முறைகள் செய்யலாகாதென்றும் கிழக்கு நாட்டவர் கொண்டிருக்கும் சாதித்தடிப்பு. மேற்கு நாட்டவர் சமாசனம், சுயாசனம், சுயமரியாதை இவற்றை எதிர்ப்பது நீதியென்பதுபோலவே இதுவும் கிழக்கு நாட்டவர் தமது அறிவுக்கெட்டியபடி செய்யும் நீதியென்பது அவர்கள் எண்ணம். நத்தையோடு, சங்கு, போளம் முதலியவைகளை எம்மைப்போல இவர்களுங் கட்டவோ என்று எதிர்க்கும் பெரிய சாதிகளும் எமக்குள் இருந்ததாக முதியோர் சொல்வர். சாயவேட்டி உடுத்தவர்களையும் எதிர்த்தாராம். சொரிகடுக்கன் போட எதிர்த்தாராம் என்று இன்றும் பேசுகிறார்கள். எதிர்ப்பவர்கள் பெரிய சாதியாராம். எதிர்க்கப்படுவோர் சிறிய சாதியாம். என்னே! சாதிப் பசாசின் பலவினைக் காட்சியே காட்சி. இதையே பிரித்தும் கவுன்சிலுக்கேறச்செய்யுஞ் சூட்சியே சூட்சி.

### ஏழாலைப் பள்ளரும்

### பாடசாலை நெருப்பிட்ட வழக்கும்

சில மாசங்களின்முன் யாழ்ப்பாணத்தில் தீக்கிரையான பாடசாலைகளுள் ஏழாலைச் சைவப் பாடசாலைக்குத் தீயிட்டது அவ்விடப் பள்ளரென்பதாக வேளாளர் சிலரின் சாட்சியுடன் கோட்டுக்கு முறைப்பாடுபோனது. விளக்கத்தில் ஒரு எதிரி விலக்கப்பட்டு, மற்ற இரண்டு எதிரிகள் பெரிய கோட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டனர் இது எப்படியாகுமோவென்று எங்கள் சாகியத்தார் வெகு ஆவலுடன் பார்த்திருந்தோம். கடைசியாய்ச் சென்ற 8 ந் திகதி விளக்கத்தில் பள்ளர் இருவரும் குற்றவாளிகளல்லவென விடுதலைசெய்யப்பட்டார்கள்.

பாடசாலை தீயிடப்பட்டது பள்ளராலல்லவென்பதும், பள்ளரை அகப்படுத்தும்படியே தீயிடப்பட்டதென்பதும், ஏழைகளும் குற்றமற்றவர்களுமான பள்ளரை அகப்படுத்தத் தெண்டித்தும் கடவுள் இல்லையோவென்பதும் ஊரிற் பேசப்படுகின்றது. ஏழையழுத கண்ணீர் கூரியவாளொக்கும். இப்படிப்பட்ட கடுங்காற்றில் அடிபட்டாற்தான் வேரோடிப் பெலத்துச் சண்டமாருதத்துக்கெதிர்நிற்கக்கூடிய விருட்சமாகலாம். சில நூருடங்களாய்ச் சாதிக்கொடுமையால் ஏழாலைப் பள்ளர் அடைந்துவந்த இடைஞ்சல்களாலேயே அவர்கள் இவ்வளவு முன்னுக்கு வந்திருக்கிறார்கள். "உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தித் தீமையான மொழிகளை உங்களிற் பொய்யாய்ச் சாட்டுவார்களானல் நீங்கள் பாக்கியவான்கள்" என்பது குருவாக்கு.

### சம்பள உயர்வு

கவர்ண்மேந்து உத்தியோகஸ்தருக்கு உயர்ந்த சம்பளம் கொடுக்கப்படவேண்டுமென்ற தீர்மானம் சென்ற சட்டநிரூபணசபையிற் தர்க்கிக்கப்பட்டு முற்றாய் வீசப்பட்டது.

### புதிய அரசுமுறையைப் பின்போட வாஞ்சித்தல்

இவ்விஷயமாய்ச் சட்டசபையிற் கொண்டுவரப்பட்ட பிரேரணை வெகுநேர தர்க்கத்தின்பின் தோல்வியுற்றது.

### மசுவாத வழக்கு

கொழும்பில் ஓர் கன்னிகையை வலோற்காரமாக வீட்டிலிருந்து தூக்கிப்போனதாகவும், அநேக நாட்களின்பின் காட்டில் பொலீசாரால் கண்டு கைது செய்யப்பட்டதாகவுமுள்ள கொலன்னுவ மசுவாத வழக்கில் முதலாம் எதிரி 20 வருடக் கடுஞ்சிறையும், மற்ற 6 எதிரிகளும் தனித்தனியே 5 வருடக் கடுஞ்சிறையும் விதிக்கப்பெற்றனர்.

### காயமடைந்த 2 மாதத்தால் உயிர் பிரிந்தது

கொழுப்பு பிஸ்கால் கந்தோர்க் கிளாக் மெஸ் அமரசேகரமென்பவர், சென்ற ஆடிமாதம் வீட்டிலிருந்து கந்தோருக்கு றேயில்மார்க்கமாக வரும்போது ஓடிக்கொண்டிருந்த புகைரதத்திலிருந்து தற்செயலாகத் திறவுண்ட கதவின்வழியாகக் கீழே விழுந்து படுகாயமுற்றார். இவர் சென்ற 25 ந் திகதி கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் இறந்துவிட்டாரென்றறிகிறோம்.

### ஆகாயவிமானத்தில் 47 பேர் மாண்டனர்

லண்டனிலிருந்து இம்மாதம் 4 ந் திகதி 54 விசேஷ பிரபுக்களுடன் இந்தியாநோக்கிப் புறப்பட்ட R. 101 என்ற பிரமாண்டமான ஆகாயக் கப்பல் பிரான்ஸ் தேசத்தைக் கடக்கும்போது நெருப்புப்பற்றி எரிந்து வெடித்துப்போயிற்று. 7 பேர் மாத்திரம் உயிர்தப்பினர். இந்திய பிரதிகாவலர் லோட் ஏர்வின் அவர்களினிடத்திற்கு நியமனம் பெறக்கூடியவராயிருந்த லோட் தொம்சன் என்பவரும் மாண்டோருள் ஒருவராம். என்னே பரிதாபமான சங்கதி!

### சோர விபாபாரி

யப்பான் "இராசா" என்றழைக்கப்படும் யப்பானிய தனவந்தனொருவன் இதுவரையும் பல பாஷைக்காரனுக உலகமெங்கும் சோர வியாபாரத் திறமையுள்ள நண்பர்களுடன் அபின் கஞ்சா போன்ற சாமான்களுடன் வியாபாரம் நடத்திவந்தான். இவனைப் பிடிப்பதற்கு வருஷங்களாக அமரிக்கா, இங்கிலாந்து, சேர்மனி முதலான பெரிய தேசங்கள் சேர்ந்து தங்களாலானமட்டும் பிரயாசைப்பட்டதன்பயனுகச் சென்ற சில நாட்களின் முன் ஏறக்குறைய 20 லட்சம் ரூபாய் பெறுமதியான சாமான்களுடன் அகப்பட்டான்.

### வட்டமேசைக் கூட்டம்

இன்னுஞ் சில வாரங்களின்பின் வட்டமேசைக் கூட்டமென்ற ஆலோசனைக் கூட்டமானது இந்தியாவின் வருங்காலத்தையிட்டு ஆராய்வதற்காக லண்டன்நகரில் நடைபெறும். அதற்குப் பிரதிஸ்தராய் எவர் தெரிவுசெய்யப்படுவரென யாவரும் இதுவரை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். பிரதிஸ்தர்களை இடபோது இந்திய பிரதிகாவலரவர்கள் தெரிவுசெய்தனுப்புகிறார். மகாத்மா காந்தி அவர்களாவது அன்றேல் சுய ஆளுகைக் கட்சியாகிய கொங்கிறெஸ் தலைவர்களில் எவராவது இந்த நாம அட்டவணையிற் சேர்க்கப்படாதது அநேகர்க்குத் தீராத மனமடிவை விளைத்தது. இந்திய ஒடுக்கப்படும் மக்களின் முன்னோடிகளிற் சிலர் தெரிந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படுகிறார்கள். வட்டமேசைக் கூட்டத்தில் அக்கிராசனராகப் பழைய மந்திரியார் மெஸ் லாயிட் ஜோர்ட்ஸ் அவர்கள் அன்றேல் தற்போதைய மந்திரியார் மெஸ். றம்சே மக்டோனல் அவர்கள் நியமனம்பெறுவார்போற் தெரிகிறது.

### 14 வயதுக் கொலைக்காரன்

கரிபண்டா என்ற ஒருவனைத் திருகுவலையால் மண்டையிலடித்துக் கொன்றதாக யேமிசப்பு என்ற 14 வயதுப் பையன் மாத்தளைப் பொலீஸ் கோட்டின்முன் கொண்டுவரப்பட்டான்.

### யாருடைய பிள்ளை

பிள்ளை ஆருக்குப் பிறந்தது என்றதை இலகுவில் பிழையின்றிக் கண்டுபிடிக்கும் புதிய முறை ஒன்றை ஜேர்மன் தேசச் சர்வகலாசாலைப் பண்டிதர் உவில்லியம் சாங்மீஸ்றெர் என்பவர் கண்டுபிடித்திருக்கிறார். குறித்த அல்லது சமுசயமுள்ள மனிதரின் தேகத்திலிருந்து சொற்ப இரத்தம் எடுத்துப் பிள்ளையின் இரத்தத்துடன் நுட்பமாய்ப் பரிசோதித்துச் சரியானபடி நிர்ணயஞ் செய்யக்கூடியதென்பதை இவர் ஆச்சரியமாக நிரூபிக்கிறாராம்.

### கிழவியின் வீரச்செயல்

சென்ற ஆடிமாதம் 9 ந் திகதி டன்வீச் நகரவாவியில் லிங் என்ற 39 வயது வாலிபனொருவன் முழுகும்போது ஆழ்ந்த சலத்தில் தப்பமுடியாது அவதிப்பட்டான். இதைத் தற்செயலாகக் கவனித்த மிசிஸ். கோஸ்வல் என்ற 60 வயதுக் கிழவி தன் சப்பாத்துகளைக் களற்றிவிட்டுத் தண்ணீருட் பாய்ந்து நீந்திப்போய் மீட்டனளாம். இதன்பேரில் ஓர் வீருதுப்பதக்கம் சிலநாட்களின்முன் அரசாங்கத்தால் இவளுக்கு அளிக்கப்பட்டது.

### தோற்றத்தில் மாத்திரம் ஏழை

சீர்மனியில் ஏழைபோலிருந்து மரித்த ஒருவனின் இனத்தோர் அவனுடைய ஊதியங்களையிட்டு ஆராய்வதிற் பயனில்லையென்று பகிரங்கமாயறிக்கையிட்டுச் சும்மாவிருந்தனர். அரசாட்சியார் இவன் மரித்த வீட்டைச் சோதித்துப் பார்க்கும்போது ஒரு சிறுப் பெட்டியுள் மாத்திரம் 30,000 ரூபாய் சேமித்து வைக்கப்பட்டிருக்கக் கண்டனா.

### பலவந்த விவாகம்

அரேபியா தேசத்தில் சட்டசபையிற் புதிதாக நியமிக்கப்பட்ட பிரமாணப்படி அத்தேசத்தில் 15 வயதுக்கு மேற்பட்ட யாவரும் விவாகஞ்செய்துகொள்ளவேண்டும். விவாகப் பதிவுக்குரிய முத்திரைவிகிதமும் குறைக்கப்பட்டிருக்கின்றது.

### உரும்பராய் காவற்பொலீஸ்

பாடசாலைக்கு நெருப்பிட்ட விஷயமாய் உரும்பராய்க்கு வைக்கப்பட்ட பொலிஸ் பட்டாளம் சென்றமாசம் 29 ந் திகதியிலிருந்து தேசாதிபதி அவர்களின் உத்தரவுடன் நீக்கப்படலாயிற்று.

### மானிப்பாய் இந்துக்கல்லூரியின் வெற்றி

மூழு இலங்கைப் பிரசித்த பாடசாலைகளின் மல்யுத்த சிலம்ப விளையாட்டுச் சென்ற 3 ம், 4 ம் திகதிகளில் யாழ்ப்பாணம் பொலிஸ விளையாட்டுத்தலத்தில் நடைபெற்றது. மேற்படி கல்லூரி இந்த விளையாட்டுகளில் விசேஷ சித்தியடைந்து இலங்கையில் இரண்டாம் நிரையிற் கணிக்கப்பட்டது சந்தோஷமான செய்தி.

### உபசரணை

இந்தமாசம் 5 ம் திகதி சனிக்கிழமை வலிகாமம் மேற்குப் பகுதியார் ஸ்ரீமான் சேர் பொ. இராமநாதனவர்கட்குப் பெரியவோர் உபசாரக் கூட்டம் நடத்தினர். சேர் இராமநாதனவர்களும் லேடி இராமநாதன் அம்மாளும் சித்தங்கேணிச் சந்தியிலிருந்து சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்குச் சிவிகையில் (பல்லக்கு) சுமந்துகொண்டு போகப்பட்டதாக ஆங்கில பத்திரிகைகளிற் கூறப்பட்டிருக்கின்றன. அங்கு நடந்த உபசரணை மிகவும் போற்றப்படத்தக்கது.

### மிஸ் கரிசன் மிஸ் நெற்றிள்ரன்

என்ற இரு ஆங்கில கிறிஸ்த மிஷனரி அம்மாக்கள் சீனுவிற் கொள்ளைக்காரராலே சுடப்பட்டுக் கொல்லப்பட்டனராம். ஆடிமாசம் 10 ந் திகதி கொம்மீனிஸ்த கொள்ளைக்காரராற் சிறைப்பிடிக்கப்பட்ட இவர்களில் மிஸ் நெற்றிள்ரன் அம்மாளின் கை விரல்களைக் கொம்மீனிஸ்தர் வெட்டிப் பிணைக்காசு 5000 டலரும் கொடுக்கப்படவேண்டுமென்ற கேள்வியுடன் இவர்களைச்சேர்ந்த சட்சிக்கு அனுப்பினராம். சீன அரசாட்சிக் குளப்பத்தினுல் மிஷனரிமார் அடையும் நிந்தை எவ்வளவு பயங்கரமானதென்பதற்கு இது திருட்டாந்தம்.

### மன்னிப்புக் கேட்டோர்

தமிழ்நாட்டுச் சட்டமறுப்புத் தொண்டர்களுக்குள்ளே கைதிகளாய்ச் சிறைப்பிடிக்கப்பட்டோரில் மன்னிப்புக்கேட்டோர் இதுவரை 1041 பேராம்.

### மகாத்மா பிறந்த நாள்

காந்திமகானின் 62 ம் பிறந்தநாட் கொண்டாட்டம் இந்தமாசம் 2 ந் திகதி. இது யாழ்ப்பாணத்தில் கந்தசாமிகோவிலிற் கொண்டாடப்பட்டது. மகாத்துமாவின் தோழருக்கு அக்கோயிலில் இடமில்லாமற்போனது துக்கம்.

### ஆதி திராவிட மகாசன சபை

இராமனுதபுரம் ஆதி திராவிட மகாசன சபை கல்லாற்றில் இந்த மாசம் 25 ந் திகதி நடைபெற்றது. சிவகங்கை மெஸ். இராசா அவர்கள் இதைத் திறந்துவைத்தனர். இராமனுதபுரம டிஸ்திறிக் போட்டின் தலைவர் இம்மகாநாட்டின் அக்கிராசனராகும்.

### யாழ்ப்பாணத்தில் மழை

வறண்ட தேசமாகிய யாழ்ப்பாணத்தில் மாரி மழைகாலம் இந்தமாசமாகும் தொடக்கத்திற் சிறுக மழைபெய்து சென்ற இரண்டு வாரங்களிற் பெரு மழையாய் வருஷித்தது. திடீரெனப் பெய்த மழையால் வயல்களுக்கு வளப்பமில்லையென்பதும் ஒருவித பேச்சு. வந்த மழை விடாதாமென்பதும் ஊரிற் கதை. வாவென வரவும், போவெனப் போகவும் எழிய சாதிகளன்றி மழை, வெயில், காற்றும் சொன்னபடி செய்யுமோ என்றும் பேசுகிறார்கள். எழிய சாதியாரும் சொன்னபடி செய்வதிற் சுணங்குகிறார்களென்றும் மூலை முடக்குகளிற் குசுகுசுக்கிறார்கள். ஆகாயவிமானமூலமாய் முகில்களைக் கிட்டி வெடிமூலம் முகில்களையசைத்து மழை வருஷிக்கும் முறையான இயற்கை விரோத முறையை ஐரோப்பிய சாஸ்திரிகள் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் பலனுஞ் சிலகாலத்தில் நம்நாட்டுக்கு வரலாம்.

### பலஸ்தீனுதேச ஆளுகைத் திருத்தம்

இவ்விஷயமாய் யோசித்து நாட்டைச் சுற்றிப் பார்த்து, சனத்தலைவர்களுடன் சம்பாஷித்துவருங்கால ஆளுகை எவ்வித திருத்தமுறவேண்டுமென்று ஆலோசனை கூறும்படி இங்கிலாந்திலிருந்து டக்டர் ஷீல்ஸ் பாதிரியார் பலஸ்தீனுவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்.

இலங்கைத் திருத்தமுறைக் கமிஷனருள் இவரும் ஒருவராய் இலங்கைக்கு வந்து எம் சனத் தலைவர்களைப் புடைத்து, சாதிபேதம் முதலிய காரியங்களை இலகுவில் அவதானித்து ஒடுக்கப்படுபவர்களின் நன்மைக்காக விசேஷ அலுவல் புரிந்தவர் இவரேயாவர்.

### விசேஷ சித்தி

ஒடுக்கப்படுபவர்களின் ஊழியசங்க உபதலைவர்களில் ஒருவரும், சாதிமாயில் மாத்திரமல்ல, ஒடுக்கப்படுவோர்க்கு உதவிசெய்வதிலும உன்னதபோக்குடையவருமான கனம் S. S. சோமசுந்தரம் B. A. போதகர் அவர்களுடைய ஜிரேஷ்ட புத்திரன் மெல. யோட்ஸ் D. சோமசுந்தரமவர்கள் விசேஷ சித்தியெய்தினர் என்பதையறிந்து மகிழ்வுறுகிறோம். தற்போது 21 வயதுள்ள இவர், 2 வருடங்களின்முன் சாஸ்திரப் பரீட்சையில் கணித விற்பன்னராய் முதன்மையாய்ச் சித்தியெய்தி B. SC. (Honours) London என்ற பட்டத்தைப் பெற்றார். இப்போது லண்டனில் இன்னோர் பரீட்சையிற் சித்தியெய்தி B. A. (Honours) London, என்ற பட்டத்தை இலங்கையில் முதலாமாளாய விசேஷ சன்மானத்துடன் பெற்றிருக்கிறார். இவரின் அறிவையுங் கெட்டித்தனத்தையும் வியந்து அரசாட்சியார் தம் வேதனத்துடன், இவரை இங்கிலாந்திற் தற்போது இஞ்சினியராகப் படிப்பிக்கிறார்கள்.

## விசேஷ அறிவிப்பு

எங்கள் பத்திரிகையின் பிரதிநிதியாக முல்லைத்தீவுப்பகுதியின் புடவை வியாபாரி Mr. K. S. கணவதியவர்கள் இருப்பதையிட்டு மிகவும் நன்றிபாராட்டுவது ஒடுக்கப்பட்ட தமிழரென நாம் கூறும் நண்பர்களின் கடன். முல்லைத்தீவுப்பகுதியிலிருந்து அவர் மூலஞ் சந்தாநேயரானோர் அவரிடந்தானே தமது சந்தாவைச் செலுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். அச்சுக்கூட வசதியீனத்தினாலும் அச்சுக்கூட விஷயமாய்த் தொடக்கத்திற் செய்த ஒழுங்கு தவறியதினாலும் நாம் சென்ற 5 பிரதியையும் ஒழுங்காய் வெளிவிட முடியவில்லை. இனிமேல் எங்கள் பத்திரிகை ஒழுங்காக மாசக்கடைசியில் முதலாம் பத்திர அளவிலேயே வெளிவர ஒழுங்குசெய்திருக்கிறோம். சந்தாநேயரான கனவான்கள் சிறுதொகையெனப் பாராகண்டஞ்செய்யாது பத்திரிகைப் பணத்தை யனுப்பிவைக்குமாறு கேட்கிறோம்.

---

# ஜனதர்மபோதினி

பிரமோதூத ஹூ ஐப்பசி மீ

---

## தாழ்த்தப்பட்டவருக்கு புறம்பான பாடசாலைகள்

இச்சூட்சவழிமிகவுஞ் சமீபகாலத்திலுண்டாக்கப்பட்ட சீர்கெட்ட வழியென்பதே எமது மாறாத் தீர்மானம்.

அறிவூறுங்கல்வியல்ல பொருளூறுங் கல்வியே பாடசாலைகளிற் சாதிபேத ஸ்தாபகத்தையாக்கியது. அதாவது மிஷனரிமார் கல்விஸ்தாபனங்களை யாக்கி யதில் ஆங்கில கல்விமூலம் வருவாயுண்டானதைக் கண்ட யாழ்ப்பாணிகள் இந்துபாடசாலைகளிலும் கிறிஸ்தபாடசாலைகளிலும் சுயபாஷைக் கல்வி பயின்றுவந்த தாழ்த்தப்பட்டவகுப்புப்பிள்ளைகட்கு ஆங்கிலபாடசாலைகள்யாதொன்றிலும்இடங்கொடாது இவர்களை ஒதுக்கி ஒடுக்கியடக்கிவைத்துக் கொண்டார். அத்துடன் கிறிஸ்தசுதேசபாஷைப் பாடசாலைகளில் விததியாசங்காட்டுவதை மிஷனரிமார் எதிர்த்துஉயர்தர சுதேச பாடசாலைகளில் எமது பிள்ளைகளை இஷ்டப்படிசேர்த்து சாதிவித்தியாசமின்றி நடத்தத்தொடங்கிய காலத்திலேயே சுதேசகிராமப் பாடசாலைகள் இந்து சங்கத்தவரால் ஆக்கப்பட்டன. இந்துமார்க்கத்தைச் சாட்டி இப்பிள்ளைகட்கு இடங்கொடாது பிரித்துவிட்டார். எதிர்க்கமுடியாத இடங்களில் புறம்பான கொட்டில்களில் இவர்களை விட்டும், குந்துகளின் புறத்திலும் தாள்வாரத்திலும் குஷ்டரோகிகள் கெட்ட வியாதிக்காரர்களென ஒதுக்கிவைத்தும் புறம்பாக்கிக் கொண்டார். மறுபிள்ளைகளைப்போல எமது பிள்ளைகளும் படித்தாற் சீர்பெறப் பொருள் வருவாயுண்டெனஎண்ணியவரான எமது சாகியத்தார் தமது பிள்ளைகளின்படிப்பு விஷயத்திற் சிரத்தை யெடுத்துக் கொண்டதினாலே படித்தால் முன்னுக்கு வந்துவிடுவார்களென்ற நல்லெண்ணம் மேவிட்டவர்கள் பலவிதமான கோளாறுகளை யுண்டாக்கத்தொடங்கினர். பாடசாலைகளிற் சேர்க்காது தடுத்தல், சைவப்பள்ளிக்கூடங்களிற்கிட்டவும் மூடுகவிடாதிருத்தல் ஆதியன எங்கும் டரந்து விரோத உணர்ச்சிகளை எழுப்பின. இதற்குள்ளிருந்து சிலர் எமது பிள்ளைகளுக்கு இரங்கி எம்மை உயர்த்திவிடக் கல்விகொடுக்கவேண்டுமென்றுசொல்லி வதிரி, நவாலி, காரைதீவு, எனுமூன்றிடங்களிலுள்ள பாடசாலைகளைப்போல புறம்பான பாடசாலைகளை எப்பிள்ளைகட்கு ஏற்பாடுசெய்யும் சூட்சமேதெரிந்து கொண்டார். வதிரி உவெஸ்லியன் பாடசாலை அவ்விடமிருந்த பெருந்தொகையாட்கள் மத்தியில் ஏலவே ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் அதுவும் சாதிபார்க்கும் கிறிஸ்தவர்களின் சூட்சியாலுண்டாக்கப்பட்ட ஒரு யூகமுறையெனவே யறிந்தோம். நவாலி காரைதீவுப்பாடசாலைகள் இவர்களுக்கென்றுண்டாக்கப்படாமல் சகலருக்கும் பொதுப் பாடசாலைகளாயுண்டாக்கப்பட்டதும்பாடசாலை இவர்களிருக்குங் குறிச்சியில் அமைக்கப்பட்டதால் காலத்திற் சாதியைப் பெலப்பிக்கத் துணிந்துமுன்வந்த மறுசாதியாரால் இவர்களுக்கென இப்பாடசாலைகள் ஒதுக்கிவைக்கப்பட்டன.

கிறிஸ்தவர்சிலர் சேர்ந்து சாதிவித்தியாசமின்றிச் சகலரும்படிக்கும் சகலபாடசாலைகளிலும் எமது பிள்ளைகட்கு இடமில்லாதபடி செய்யச் சாதிச்சைவர் யோசனையுடன் புறம்பான பாடசாலை முறையை மிஷன் பாடசாலைகளிற் செலுத்தமுயன்றும் இவர்கள் சூட்சி பிறதேச பரோபகாரிகளால் வெட்டப்பட்டது. எமது பிள்ளைகள் தற்காலம் கோப்பாய் தெல்லிப்பழை வித்தியாசாலைகளிலும் யாழ்ப்பாணக்கல்லூரி சென்பத்திரிசியார் சென்யோன்ஸ் சென்றல்கல்லூரிகளிலும் சாதிபேத மின்றிப்படிக்க வழிகோலிவிட்டவர்களும் தமது வழக்கம், குறிக்கப்பட்ட பிள்ளைகளைத் தம் பாடசாலையிற் சேர்க்காதிருப்பதேயென்று தக்கோர் சொல்லும் வழக்க நியாயத்தின் மூலவேரை வெட்டி விட்டவர்களும் பிறதேச அன்னிய மதக்குரவர்களேயன்றி நம் இந்துக்களுமல்ல, கிறிஸ்தவர்களுமல்ல. அப்போதே புறம்பானபாடசாலைச் சூட்சி சமத்துவ சகோதரத்துவவன்மைக்கு கோடரியாகுமென எண்ணி நாமேயதையிட்டு நல்ல வேலை செய்து விட்டோம். அப்போது நாம் அவ்விதவேலைசெய்யாதுவிடில், எமதுபிள்ளைகள் தற்போது தெருவில் நின்று தயங்க வேண்டியதாகும்.

சாதிவித்தியாச மற்ற கல்வி வித்தியாசாலைகளிலும் உபாத்தியாக்கற்சாலைகளிலும் வளர்வதைக்கண்ட இந்துக்களான சைவப் பெரியோர் திறந்த சூட்சகளிற் சைவப் பாடசாலை ஸ்தாபனம் எழியசாதிகட்குப் புறம்பான பாடசாலை அரசாட்சிப்பாடசாலைகளை சைவஸ்தாபனங்களிலும் சாதிக் கொடுமையுள்ள இடங்களிலும் ஸ்தாபித்தல் எனும் மூன்றும் முக்கியமானவை.

புறம்பானபாடசாலைஸ்தாபனம் எங்கள் சாதிக்கு ஈனமானவை. எங்களை யெங்கள் ஸ்தாபனத்திலிருந்து கீழே தள்ளுபவை. எங்களைத்தமிழரல்லரெனச் சொல்லுந் தறுகணாளரினால் நாம் புறம்பாக்கப்படச் செய்பவை. அரசாட்சியிலும் மற்றிடங்களிலும் நாம் பிரத்தியேகப்படுத்தப்பட மூலாதாரமானவை. நாம்பொதுச்சுதந்தரங்கள் பொதுஸ்தாபனங்களுக்கு உரிமையற்றவர்கள் தானெனக்காட்டக்கூடியவை என்பதை நாம் மட்டுமல்ல கற்றபெரியோர் யாவரும் ஒத்துக் கொள்ளுகிறார்கள். தொகையாக எமது பிள்ளைகள் இருக்குங்கிராமங்களில் இவர்களுக்கெனப்பாடசாலைகள் இருக்கவேண்டியது மிகவும் அவசியமென்பது நாம் மிகவும் அவதானமாய் யோசனைசெய்தகாரியம். அதாலும் சிலவித கேடுகள் உண்டெனச் சிலர்சொல்லி வாதிட்டாலும் அவைகள் தவிர்க்கமுடியாத சிறுபிழைகளானதினாலே எமது பிள்ளைகள் திரளாயுள்ள இடங்களிற் கட்டாயம் எமக்கெனப்புறம்பான பாடசாலைகளை ஸ்தாபிக்காமல் இருப்போமாயின் பிழைசெய்பவர்களாவோம். ஆனால் புறம்பான பாடசாலைகளால் எமக்கிருக்குந்தீங்கையிட்டு நம்மவர் விளங்கிக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். இதையிட்டு முரண்டுபவர் மயக்கறுக்க அவ்விஷயமாய் இன்னோர்முறை எழுதுவோம்.

---

## விசேஷ விஷயக்கொத்து

பெஸ். கரீந்திர நாக் சட்டோபத்தியாய எனும் புலவர் அவர்கள் இரண்டுவாரங்களின் முன் இலங்கையைத் தரிசித்துச் சென்றனர். இவர்கள் பெயர் பெற்ற இந்திய தேசாபிமானி. இவர்கள் இந்தியாவுக்குப் பயணம்புறப்படும்வேளை, இலங்கை மோணிங்லீடரின் பிரதிஸ்தர் இவர்களைக்கண்டுபேசியபோது கேட்டகேள்விகளில் ஒன்று: இலங்கையின் முதன்மையான வழிகாட்டி. யார் என்பது. அதற்கு புலவரவர்கள் சொன்ன மறுமொழி: "வழிகாட்டியாயிருக்கத் தகுதியுடையவர் இலங்கையில் ஒருவரே யென்பதும் அதுவும் ஒரு யாழ்ப்பாணி யென்பதும் எனது தீர்மானம். அவர்தான் மனத்திடமும், தயாளமும், சுயாதீனமும் பெலனுமுடைய சிறீமான் சுந்தரலிங்கமவர்கள்" என்பதாம். சிறீமான் சுந்தரலிங்கமவர்கள் இலங்கைச்சர்வகலாசாலைக்கல்லூரிப்பண்டிதர். சாதிவித்தியாசத்தை நறுக்குங் கோடரி. இலங்கை இளைஞருக்கு வழிகாட்டி. இப்படியான பெரியமனுஷரே யன்றி மற்றவர்கள் பெரியமனுஷர் நிரையில் வைக்கப்படாதிருப்பது துக்கமானது.

ஃ ஃ

மகாத்துமா காந்தியவர்களையிட்டு மொண்டேகு வெனும் மந்திரியவர்கள் சொல்வது "அவர் புதியகூட்டுறவுச் சீர்திருந்தஞ்செய்யுமொருவர். இந்தியரின் இடைஞ்சல்களைக் கண்டுபிடிப்பதிலும், அந்த இடைஞ்சல்களை நீக்குவதிலும் மெய்யான ஆசையுடையவர். இது தன்னையறியச் செய்வதற்கான ஏதுநியாயங் கொண்டுமல்ல ஆனால் தன் சொந்த மனுஷரின் நிலைபரங்களைத் திருத்துவதற் காகவே" என்பதாகும். (Mr. Gandhi of whom Mr. Montagu says: "He is a social-reformer; He has a real desire to find grievances and to cure them not for any reasons of self advertisement, but to improve the conditions of his fellow-men.")

ஃ ஃ

மனிதன்மூன்றுபேர்களிடமிருந்துமூன்று புத்திகளைக் கற்றுக்கொள்ள வேண்டுமாம். ஏழையாகவிருந்து பணக்காரன் ஆனவனிடமிருந்து ஒரு புத்தி, பணக்காரனாயிருந்து ஏழையானவனிடம் ஒரு புத்தி, பரம்பரைப் பணக்காரனாக விருப்பனிடமிருந்து ஒரு புத்தி, ஆக மூன்றுபுத்திகளாம். அதாவது தொழில் முயற்சியென்பது ஒருபுத்தி, சிலவும் அதன் வழியும்ஒரு புத்தி, இரக்கமுந்தன்மையும் ஒரு புத்தி ஆக மூன்றுபுத்தி.

ஃ ஃ

எந்த வீட்டிலும் பெண்களுக்குச் சுவதந்திரமில்லை. பெண்ஜாதி பேச்சைக் கேட்டு நடக்கிறான், என்னும் குற்றத்தில் அகப்படாதவர் அநேகமாக இல்லை. நான் பெண்கள் வார்த்தையைக் கேட்பதே யில்லை என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் அனேகர் இருக்கிறார்கள். கோபம், சண்டை, காரியத்தைத் தெரிந்துகொள்ளாதபுத்தி, சமயோஜிதம் தெரியாத ஆத்திரம், வீண்செலவு, அவசியத்தில் கொடுமை முதலியவைகளை உடைய பெண்ஜாதிகளையிட்டு முன்கோபமும் படபடவென்று பேசும்குணமும் தவிர வேறு எல்லாம் நல்லகுணமென்றே சொல்லுகிறார்கள். உலகவாழ்க்கையின் மர்மங்கள் இப்படியே இருக்கும். பெண்ணெடுப்பதும் கொடுப்பதும் பெண்கள் சம்மத மில்லாவிட்டால்நடக்கக் கூடிய காரியங்களல்ல. பெண்வார்த்தையையும்மீறிச்செய்ய வேண்டுமானால் பெருந்துணிவும் விசேடநன்மைகளும் ஏற்படவேண்டும்.

---

## வேளாளரிற் குற்றம்பாரித்தல்

ஒருமாசத்தின் முன் புலோலியில் பெரியதோர் தொந்தரவு நடந்தது புதினப்பிரியர் அறிந்தவிஷயம். நளவர் காவடியெடுத்து வேளாளர் சீவிக்கும் ஒழுங்கையால் மேளதாளங்களுடன் போனதும் அவர்கள் ஏலவே காத்திருந்து தீங்குசெய்தனர். இதனாலே ஆயுதமணிந்த பொலீஸ் பட்டாளம் சலகமடக்கும்படி அங்கேபோக நேர்ந்தது.

காவடியெடுத்துப்போன இந்துசமய தொழுகையையும் கொண்டாட்டத்தையும் ஊர்வலத்தையுந் தடுத்துத் தொந்தரவுசெய்தது சாதிக்கொடுமையேயன்றி வேறொன்றுமல்ல. பொலீஸ் சுப்பிறிண்டென்ற் எதிர்த்து அடக்கும்போது இவர்கள் தாம் தடுத்ததற்குச் சொன்னநியாம் அந்த ஒழுங்கை பிரசித்தபாதையல்ல வென்பதும் அது அவ்வயலிலுள்ளவரின் பிரத்தியேக சொந்த ஒழுங்கை யென்பதுமாம். இதனாலே லைசென்ஸ் நீக்கப்பட்டதுடன் கோட்டுவீட்டுக்குப் பொலீஸ் விதாணையாலே அக்காவடி கொண்டுபோகப்பட்டது' அவ்வொழுங்கை பொது ஒழுங்கையோ அல்லது சிலரின் சொந்த ஒழுங்கையோ வென்பதை பொலீஸ் சுப்பிறிண்டென்ற் ஆன Mr. புறூம்லிதுரையவர்கள் விசாரித்தறிந்து ஆவணி மாதம் 22 ந் திகதி லைசென்சுடன் காவடி யெடுத்துப்போன நளவரைத்தடைசெய்த குற்றச்சாட்டில் (பீனல் கோட்சட்டப்படி) சாவுகச்சேரி, பருத்தித்துறைக் கோட்டு நீதவான்கொறேயா அவர்கள்முன்பாக புலோலி மேற்கிலுள்ள நாற்பத்து மூன்று வேளாளரிற் குற்றம் சாட்டியிருக்கிறார்.

அதுமட்டுமல்லஅதிகாரமுள்ள புலோலிப் பெரியோரான ஆறுபேர் அந்த ஒழுங்கை பொதுஒழுங்கையல்லவென்று தமக்குப்பொய்யான அறிவிப்புக்கொடுத்துவிட்டதாகவும் அந்த ஆறுபேரிற் குற்றஞ்சாட்டியிருக்கிறார். இந்த வழக்கு எப்படியாகுமென்று ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள். பொது உரிமைகளைத் தமது சொந்த உரிமையெனச் சொல்லுவது பெரிய கொடுமை. இது பெரிய நீசத்தனம். பொது ஒழுங்கையைப் பொதுவல்ல வென்று அவ்விடப் பெரியமனுஷரான தக்கோர் சொன்னார்களாயின் அவர்களை வேளாளரென்று நயினார்மாரென்றும் நளவர் மதிப்பது எப்படி? இதுதான் ஒடுக்கமென்பது.

இவர்களை யெதிர்க்கும்படி தூண்டிவிட்டது நட்டுவமேளமும் நாகசுர வாத்தியமுமா? நளவர்காவடியெடுக்கப்படாதென்பதா? தமது ஒழுங்கையால் நளவர் போகப்படாதென்பதா? காவடியுடன் போகப்படாதென்பதா? வேளாளரான பெரியோரே உங்கள் மனத்தின் எரிப்பு உங்களை எரிக்கும் நெருப்பு. கோயிலுக்குக்காவடியெடுப்பவனைத் தடுப்பது சுவாமிக்கு எப்படியிருக்குமென்பதை யுணராதபடி தாமே சுவாமிகளென வேளாளர் நின்றால் எவரைச் சுவாமியென்போம்? இதுயாருக்குப்பெருமையோ?

ஒடுக்கப்படுஞ்சாதிகளான பள்ள பறைய நளவ சாதிகள் டாம்பீகமான நடையினாலும் வேளாளரைப்போல பந்தல், மேளம், வெள்ளை முதலிய வீண்செலவுக் கடுத்த ஆசையினாலும் இடர்ப்படாமல் இப்படிப்பட்டவைகளுக்குங் கோட்டுக்குஞ் செலவழிக்கும் பணத்தை தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கனுப்பிப்படிப்பிக்கும் விஷயத்திற் செலவழிக்கும்படி புத்தி சொல்லுகிறோம். கோயிலுக்குக்காவடி யெடுக்கும் விஷயத்தில் எங்கள் சாதிகளேயதிகம் ஆசைப்படுகின்றனர். அட்சரக்கூடு கட்டுவிக்கும்படி பேயாடின பெண்பேயைப்போல மேளமடிக்கும்படி காவடியெடுக்குஞ் சனங்களுமுண்டு. மேளத்தைவேண்டாமென்று தடுக்கும் வேளாளனும் வேணுமென்றாசைப்பட்டலையும் வேளாளர் தவிர்ந்தமறுசாதிகளும், மேளமில்லா வேளாளரும் குருடரையெதிர்க்குங்குருடரோ? அன்றி குருடருக்குவழிகாட்டுங்குருடரோ என்பது கேள்வி. காவடியெடுக்கும்படியும் மேளமடிக்கும்படியும் ஒருபகுதியைத் தூண்டிவிட்டு எதிர்க்கும்படி இரகசியமாய் மறு பாகத்தையுந் தூண்டிவிட்டு வேடிக்கைபார்க்கும் புலிகளும் ஒருபக்கம். பறையபள்ளநளவசகோதரரே! நீங்கள் வைத்திருக்கும் அற்ப பணத்தைச் சட்டையிட்ட சப்பாத்திட்ட கோட்டு வீட்டாருக்கு அர்ச்சனை பண்ணச்செய்கிறவர்களை நம்பி உலையவேண்டாம். இதாலே நீங்கள் தெருநீளங் காவடிகளாக வேண்டியதாகும். உங்கள் கையிலுள்ள இரத்தினங்களான உங்கள்பிள்ளைகளை, ஆண் பெண் குழந்தைகளைப்பாடசாலைக்கனுப்பிப் படிப்பியுங்கள். அப்போதான் உங்கள் பணத்துக்கு வட்டியுண்டு. தெய்வத்தை வணங்கும் முறையில் அமைதியும் கீழ்ப்படிவும் அமையும். கடவுள் கிருபையும் உண்டாகும். மேளமடித்தல், காவடியெடுத்தல் நடனமாடலல்ல, நீங்களும் உங்கள் சந்ததியும் மனுஷர் நிரையிற் சேர்க்கப்படுதலே சங்கையென்பதை உணர்த்துகிறோம்,

(இசன்முற்பகுதி ஆங்கிலபத்திர மொழிபெயர்ப்பு)

---

## இலங்கை வித்தியாபகுதி

இலங்கையரசின் கல்விப் பகுதியின் சென்ற வருஷ றிப்போட்டின்படி இலங்கையில் மிகவும் தொகையான பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டதாய்த் தெரிகின்றது. இந்தப் பாடசாலைகளில் அரசாட்சிச் சொந்த ஸ்தாபனங்களிலும் அரசாட்சி உதவி பெறும் ஸ்தாபனங்கள் $1\frac{1}{2}$ மடங்கானவை. இவைகட்காய் அரசாட்சியார் பெரிய தொகை செலவிடுகின்றார். இன்னும் கல்வி விருத்தியே இலங்கை மந்திர சபை ஆசிக்குமொன்று.

ஆசன விஷயமாய் வித்தியாபகுதி செய்து கொண்ட ஒழுங்கு பெரிதும் கிளர்ச்சிக்குரியதாயிற்று. என்றாலும் அது சரியென சற்சமய மனுஷ கோஷ்டியினர் ஒத்துக் கொண்டதினாலே யாழ்ப்பாணக் சொதியடங்கியது. பெரிய மனுஷரான இந்துக்கள் சாதிக்கொள்கையை சமயக் கொள்கையென்றும் சமாசனம் சைவ விரோதமென்றும் பெருங் கூட்டங் கூடி, கவர்ணரிடம் கொழும்புக்குப் பிரதிஸ்தராய்ச் சென்றிருந்தார். வித்தியாதிகாரியின் சட்டம் நீக்கப்பட வேணுமென்பதே யிவர்கள் கொண்ட கொள்கை.

மறுபடி வலிகாமம் வடக்குப் பிரதிஸ்தரும், அவருள் வலிகாமம் வடக்குப் பிரதிநிதியும் யாழ்ப்பாணத்தில் கவர்ணர் பெருமானைக் கண்டு பேசி சமாசனப் பிரமாண நீக்கத்துக்காய் இரந்து நின்றார். இத்துடன் நில்லாது இங்கிலந்துக்கு அரசபெருமானின் காரியாலயமான பாளிமேந்துக்கு அதாவது கலனிகளின் இராசமாலிகிதருக்கு இவ்விஷயமாய் அபயமிட்டுள்ளார். ஆகவே தாழ்த்தப்பட்ட சாதியார் விஷயமாய் இந்து சமயப் பெரியோர் செய்து வரும் துரோக நடபடிகள் எப்படியானவையென்பது புலப்படும். இவ்விஷயமாய் இந்துப் பெரியோர் எவராவது அரசினிடம் வாதிட்டு எமக்காய் வேலை செய்வதைக் காணோம். கௌரவ இராசரத்தினமவர்களின கொள்கையை எதிர்த்து நடக்கும் இந்துப்பெரியோரை நாம் அண்டிக் கொள்வதெப்படி? ஆகவே சமயப் பெரியாரைவிட்டு மனப பெரியாரான பெரிய மனமுடையவரையே அண்டிக் கொள்ள வேண்டியது சர்வ மதக்காரரினதும் கொள்கை. அதுவே தகுதியென்பது மாறாத உண்மையுமாம்.

---


## விளம்பரம்

ஒழுங்கான நம்பிக்கையான நல்ல வீட்டு வேலையாட்கள் தேவைப்படுவோர் கீழ்க்காணும் விலாசத்தில்பெற்றுக்கொள்ளலாம். சமையற்காறர், குசினிவேலையாள், பூந்தோட்டக்கூலி, ஆயாள்மார் பியோன் முதலியவர்களுக்கு உடனே கேட்கவும். கொமிஷன் மிகவும் கொஞ்சம்.

எஸ். எம். ஒலிவர் அண்ட்கொம்பனி,
முதலாம் குறுக்குததெரு,
யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாணம் ஒடுக்கப்படுந் தமிழரின் ஊழியசங்கம்

எங்கள் சங்கத்தின் விசேஷ கொம்மிற்றியொன்று 23 ந் திகதி தெல்லிப்பழையிற் கூடிற்று. இலங்கைக் கவர்ணரான சேர் ஹேபேட் ஸ்ரான்லி மகான் யாழ்ப்பாணத்தைத் தரிசிக்கவிருப்பதால் யாழ்ப்பாணத்திற் புறக்கணிக்கப்பட்ட சாதியாரின் இடைஞ்சல்களையிட்டு டொனமூர் கம்மிஷனருக்கு எழுதிக்கொடுத்த பெட்டீசத்திற் குறிக்கப்பட்ட காரியங்களையிட்டும் இன்னுஞ் செய்யப்படவேண்டிய நல்லொழுங்குகளையிட்டும் விபரமாகப் பேசவேண்டுமென்பது கொம்மிற்றித் தீர்மானம். பொது உரிமைகள் ஒன்றும் ஒருவருக்காவது தனிச் சுதந்திரமல்லவென்பதே இச்சங்கம் கொண்டுள்ள விசேஷ கொள்கை. யாழ்ப்பாணத்தில் இதற்கு விரோதமாகப் பொது உரிமைகளைச் சுயசலாக்கியமாக்கிக்கொண்டிருப்பது வரவர நீங்கி வருவது சந்தோஷமான செய்தி.

## நமது முன்னோர் நாலாயிரமுழம்

ரிஷிகளும், சித்தர்களும் நமது முன்னோர்கள். அவர்கள் சொன்னதும், அதை ஆதாரமாகக்கொண்டும், அவர்கள் பேர் கொண்டும் எழுதியவைவகளுமே முன்னோர் நூல்கள். சில சந்தேகங்களை நிவிர்த்திக்க வசிஷ்டர் ராமரை புசுண்ட மகாரிஷிபண்டை கூட்டிப்போனதாகவும், அந்த ரிஷி நீங்கள் யார் என்று கேட்க நான் வசிஷ்டன் இவன் விஷ்ணுவின் அவதாரமான ராமன் என்று சொன்னதாகவும் நீ எந்த வசிஷ்டன், இவன் எத்தனையாவது ராம அவதாரம் என்று புசுண்ட மகாரிஷி கேட்டதாகவும் ராமருக்கு வசிஷ்டர் உபதேசித்த ஞானவாசிஷ்டத்தில் உள்ள புசுண்டர் கதையையும் ஒரு ரோமம் உதிர்ந்தால் ஒரு பிர்மா இறப்பார். அப்படி மூன்றரைக்கோடி பிர்மா இறந்தால் என்னுடைய மூன்றரைக்கோடி ரோமமும் உதிரும் அப்பொழுது நான் இறப்பேன் என்று தேவேந்திரனிடம் சொன்ன ரோமரிஷியின் கதையும், அந்த ஒரு ரோமரிஷி இறந்தால் எண் கோணத்தில் ஒன்று நிமிரும் அப்படி என்னுடையஎட்டுக்கோணமும் நிமிர்வதற்கு எட்டு ரோமரிஷி இறக்கவேண்டும். அப்பொழுது எனது ஆயுசு முடியுமென்று சொல்லி தேவேந்திரனின் சந்தேகத்தைப் போக்கின அஷ்டகோண மகாரிஷியின் கதையையும் ஆலோசித்தால் நம்மால் கண்டுபிடிக்க முடியாத தூரத்தில் நமது முன்னோர்களின் காலமிருக்கிறது. சிருஷ்டியானது அடிமுடியற்று அநாதி நித்தியமாய் எப்படி விளங்குகிறதோ அதுபோல நமது முன்னோர்களுக்கும் அடியுமுடியுமில்லை. அந்த முன்னோர்களையெல்லாம் நமது அனுபோகத்திற்குக் கொண்டுவந்து நம் வாழ்க்கைக்குச் சரிப்படுத்திக்கொள்ளுவது வீண்வேலையும் அவசியமில்லாத காரியமுமாகும். அதாவது நமது பண்டிதர் மணி திருநாவுக்கரசு முதலியார் நட்பை ஒட்டி நாமெல்லாம் சேர்ந்து முன்னோர்களை கொண்டுவந்தாலும் அவர்கள் இப்பொழுது காணும் றெயில், மோட்டார், டிராம், கம்பியில்லாத்தந்தி முதலியவைகளைப் பார்த்து ஆச்சரியத்தால் பின்னுமொருதரம் இறந்துபோவார்கள். அல்லது வெட்கப்பட்டு ஓடிப்போனாலும் போவார்கள். ஆனதால் அதிலும் பிரயோசனமில்லை.

ஆதியுகம் இரண்யன் காலமான நரசிம்ம மூர்த்தி அவதாரத்தில் நாலாயிரமுழமுள்ள மனிதர்களும் இரண்டாவது யுகமான ராம அவதாரத்தில் நானூறுமுழ நீளமுள்ள மனிதர்களும் மூன்றாவது யுகமான கிருஷ்ண அவதாரதில் நாற்பதுமுழ மனிதர்களும் இருந்தார்கள். கற்கி அவதாரமான இந்த நாலாவது யுகத்தில் நாலுமுழ மனிதர்களிருக்கிறார்கள் என்பதற்கு நமது முன்னோர் நூலிற் காணும் கதைகளாலும் நமது பெரியவர்களான பாட்டன் பாட்டிமார்கள் சொல்லிப் போயிருக்கிற கதைகளாலும் தெரியவருகிறது. நாலாயிரமுழ நீளமுள்ள மனிதர்கள இருந்த காலத்தில் அவர்களைவிட பலமும், பருமனுமுடைய மனிதர்கள் இருந்ததாகவும் அவர்களில் இரணியனுக்கு இமயமலையும் விந்தியகிரியும் காது குண்டலங்களாக மகாமேரு கைததடியாகவிருந்ததாகவும் நமது முன்னோர் நூல்கள் கூறுகின்றன. அந்தக்காலத்தில் இந்த மலைகளின் அளவு இவ்வளவோ? இவ்வளவுதானோ அதைப்பற்றின விவகாரம்? பழையநூல் பிரமாணத்தில் போதிய ஞானமுடையவர்களிடம்தான் கேட்கவேண்டும். காதின் கனமும், தோளின் நீளமும், வீட்டின் அளவும், ரோட்டின் பரப்பும், பிரகலாத ஆழ்வாருடைய தாயாரின் முகத்தின் விசாலமும் தெரிவதற்கு ஆராய்ச்சி செய்யவேண்டியதில்லை. நாலாயிரமுழ மனிதனுக்குத் தகுந்தவாறு அந்தக்காலத்து ஏற்பாடு அமைந்திருக்கலாம். நாலாயிரமுழ நீளமுள்ள மனிதனின் ஊண், உடை, குடியிருப்பு முதலிய எல்லாவித ஏற்பாடுகளும் நானூறுமுழ நீளமுள்ள மனிதனுக்கு ஒத்துவராது. அதுபோலவே நானூறுமுழ நீளமுள்ள மனிதனின் ஏற்பாடு நாற்பதுமுழமுள்ள மனிதனுக்கும் நாற்பதுமுழமுள்ள மனிதனின் ஏற்பாடு நாலுமுழமுள்ள மனிதனுக்கும் ஒத்துவராது. இது எல்லாருக்கும் தெரியக்கூடியதுமாகும். ஆனால் அகத்தியர் மட்டும் பெருவிரல் பிரமாணமாக அவர்களுடனிருந்து சண்டைபோட்டதாக அநேக முன்னோர் நூற் பிரமாணங்கள் சொல்லுகின்றன. நாலாயிரமுழ நீளமுள்ள மனிதரிலிருந்து நாற்பதுமுழ நீளமுள்ள மனிதர்கள் வரையிலும் அவர்கள் கூடவிருக்க அகத்தியர், வசிஷ்டர், பராசர் அவர் பிள்ளை வியாசர், பிருகு முதலிய நமது முன்னோர் அவர்களுடைய ஆசார அனுஷ்டான சட்டதிட்டங்களை வகுத்த நூல்களை நாலுமுழ மனிதர்களான நமது தலையில் ஏற்றினால் அதன் பாரத்தைத் தாங்கமுடியுமா? தாங்கமுடியாமற்றானே நாலுமுழ மனிதர்களுக்கு ஏற்ற சட்டதிட்டங்களில் வகுக்கப்பட்ட எல்லா மனிதர்களாலும் தடியடிபட்டும் நன் மதிப்பிழந்தோம். நாலாயிரம் நானூறு நாற்பதுமுழமுள்ள மனிதர்களுடன் சண்டைபோட்டு திருவருள்பெற்று சிரஞ்சீவி அடைந்து நாலுமுழ மனிதர்களான நாம் வந்த உடனே நம்மைவிட்டு முன்னோர்கள் போய்விட்டார்கள். அவர்களில் பராசர் என்பவர் நாலுமுழ மனிதனுக்காக பராசாஸ்மிருதியென்று ஒரு நூல் செய்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்த நூலுமிருக்கிறது. அந்த நூலைப் பிரமாணமாகக் கொண்டால் முன்னோர் நூலின் பிரமாணத்தில் வாழவேண்டுமென்று நினைக்கும் நமது பண்டிதர் திரு மணி திருநாவுக்கரசு முதலியாரும் அடிமை, தாசிமகன், ஆசாரம் கெட்டவன், ஒழுக்கமில்லாதவன் என்னும் சூத்திரனாகவேண்டும். நல்ல மடையன், நல்ல தாசிமகன, நல்ல அடிமை என்னும் சற்சூத்திரன் ஆவதற்கும் சற்சூத்திரனென்று சம்மதித்துக்கொண்டிருக்கும் சில சைவர்களுக்கும் மனமொவ்வாது.

நாலாயிரம்முழமுள்ள இரண்யன் காலத்தில் தகப்பன் பேரைச்சொல்லாமல் விஷ்ணுவின் பேரைச்சொன்ன மகனைத்தண்டித்ததற்காக இரணியன் கொல்லப்பட்டு நீதியை நிலைநிறுத்தினதாகவும், நானூறுமுழமனிதன் காலத்தில் அரசன் இளைய பெண்ஜாதிக்கு கொடுத்த வாத்தால் முதற் பெண்சாதியின் மகனைக் காட்டிற்கு ஓட்டி காட்டிற்குப்போன இராமன் பெண்சாதியை இராவணன் எடுத்துப்போனதும் அதனால் அவன் கொல்லப்பட்டதாகவும் நாற்பதுமுழ நீளமுள்ள மனிதன் காலத்தில் சூதாடினதும் பெண்சாதியைத்தோற்றதும் செயித்தவன் துயில் உரிந்ததும் அதை பெரிய முன்னோர்களெல்லா பார்த்துக்கொண்டிருந்ததும் தோற்றவர் காட்டிற்குப் போனதும் பின்வந்து தனது ராட்ஜியத்தை செயித்ததாகவும் அறிகின்றோம். இவைகள் தெய்வம் மனிதனாக வந்து நடந்து காட்டினதாகவும் நூல்கள் சொல்லுகின்றன. நாலுமுழமுள்ள மனிதர்களான நமக்கும் இப்பொழுதுள்ள ராசாக்களுக்கும் அந்தக்கதைகளுக்கும் ஏதாவது சம்மந்த முண்டா என்பதை ஆலோசித்துப் பாருங்கள். அந்தக் காலத்துத் தெய்வம இந்தக்காலத்தில் வந்து அவதாரம் செய்தாலும் அவைகள நமது காலத்தில் நடக்க ஏது உண்டா? எந்த ராசாவாவது சூதாடிப்பெண்சாதியைத் தோற்றுசபையிற் சீலையைப்பிடுங்க ஆகுமா? முதற்பிள்ளையைக் காட்டிற்குப் போகச் சொல்லி இரண்டாவது பிள்ளைக்குப் பட்டங்கட்ட இந்த காலத்திலிடமில்லை. ஒரு ராசா பெண்சாதியை இன்னொருஇராசா எடுத்துப் போவதை இங்கிலீஷ்சட்டம் தடுத்தே விட்டது. அப்படி இருக்கையில் அந்தக்கதைகளால் நாம் கற்றுக் கொள்ளும் நீதியென்ன? (குடி அரசு)

## ஆசௌசம் யாருக்கோ?

மட்டுவில்: ஓய் திராவிடா! ஆசௌசம் யாருக்குடையது.

திராவிடன்: எந்தச்சாதியானாலுஞ்சரி ஆசௌசம் உரியவர்களுக்கே ஆசௌசம் உரியது.

மட்டு: ஆசௌசம் உடையவர்கள்யார்.?

திராவி: குளித்து முழுகி வேட்டி தோய்த்துலர்த்தி நடவாதவர்களும், மாடாடு மீன்முதலிய ஊனுண்பவர்களும், அசுத்தமான வீடு வாசல் உள்ளவர்களும், அசுத்த பழக்க வழக்க முள்ளவர்களும் எச்சாதியாரானாலும் அவர்கள் தானென்பது எனது எண்ணம்.

மட்டு: பள்ளர், பறையர், நளவர், செம்படவர் என்பவர்களே ஆசௌசமுடையவர்களெனச் சைவாசௌசதீபிகையிற் கூறப்பட்டிருக்க, நீசொன்ன காணும் எமது மதப்பழக்கங்களின் பழைய பிடியையும் முடிச்சையும் இளக்கிவிடமுன் வந்து விட்டீர். உமக்கேது காணுஞ்சைவம்?

திரா: இந்து மதத் தீபிகைகளையும் மனுஸ்மிருதிகளையும் கூட்டித் தீயிடும் குடியரசான சுயமரியாதைக கட்சியார் தான் காணும் உமக்குச்சரி. தீய தீபிகைகளிற் கூறப்பட்டதைவிட்டு கண்முன் இருப்பதைப் பாரும். நீரும் உமது ஆட்களும் ஆசௌசமுடையவர்களாயிருந்து கொண்டு தீபிகையைக்காட்டுவதால் ஆசௌசம் விலகாது பாரும். சைவம் உமக்குத்தான். பிடித்துக்கொள்ளும்.

மட்: அப்படியா! நீர் வந்து காந்தியைப் போல இந்து மதசதை யழித்து விடப்பார்க்கிறீரோ? ஆசௌசம் எல்லாருக்குமென்று சொல்லி உலகப் புரட்டுப் பேசுகிறீரே!

திரா: பள்ள பறைய நளவ செம்படவக் கிறீஸ்தவர்களையும் ஆசௌசமுடையவர்களென்பீரா? கவனமாய்ப் பேசும்.

மட்: உம்முடன்பேசுவதில் பிரயோசனமில்லை நம்மவர் ஒருவர் சமீபத்தில் சோதிடபரிபாலினியில் எழுதியதை யுமக்கனுப்புகிறேன் பாரும்.

திரா: எம்மவருமொருவர் இந்து சாதனத்திற் சமீபத்தில் எழுதியதை யுமக்கனுப்புகிறேன் பாரும். எங்களுக்குள்ளேயு சுருண்ட வாலுள்ளவர்களுண்டு.

மட்: ஏன் உம்மை ஆசௌமுடையவரென்று அதில் எழுதிவிட்டாரா? அப்படியெழுதினாற் கிட்டவிடுவோமல்லவா?

திரா: இல்லையில்லை. அப்படி எம்மவரை ஆசௌசமுடையவர்களென்று எழுதினால் இந்து மதத்துக்குக் கொள்ளியாய் விடும். அப்படியல்ல, நந்தனார் வித்தியாசாலையில் நடவாததை நடந்ததாகவும் அதுவுங் கேள்விப்பட்டதாகவுங் கூட்டங்கூடித்தீர்மானஞ்செய்து கூட்டங்களையுமட்டும் மூசி மூசிப் பேசிவிட்டார்களாம்.

மட்: பேசப்படாததைப் பேசியதாகச் சொல்லி, கேள்விப்படாததைக் கேள்விப்பட்டதாகச்சொல்லி இப்படி இடர்ப்படுவதேன். உம்மை நம்பமுடியவில்லையே.

திரா: நம்பிக்கையீனந்தான் நான்கூறும் ஆசௌசங்களிலொன்று. நிற்க, வீட்டிலிருந்த செவிடியான மகளிடம் தோட்டத்திலிருந்து வந்ததகப்பன் "பிள்ளாய் உன் தாயெங்கே" யென்க, அவள் "அப்பா! விருப்பமான இடத்திற் கலியாணம் பேசிச் செய்வதேயன்றி என்னைக் கேட்கவேண்டா' மென்றாளாம். அவள் மனதில் விடிதோறுமுள்ள கலியாணயோசனை அந்த நேரத்திலுந் தோன்றியது. இவர்களும் அவள் போன்றாரே.

மட்: பேசப்படாததைப் பேசியதாகச்சொல்ல அதுவுங் கூட்டங் கூடிப்பிரேரிக்க, அனுவதிக்க கேட்டுக்கொண்டிருந்தோரெல்லாரும் யோசனையற்றவரா? அதுவும் பிரசித்தமாய்ப் பலபேர்சமுகத்தில் ஒருவர் பேசியதாகப் பேசாததைப் பிரேரித்தாரா? அதுவும் தாம் அங்கில்லைக் கேள்விப்பட்டோமென்றாரா? கேள்விப்பட்டதை உண்மைபொய் யாராயாது, நடவாததை நடந்ததென்று சொன்னரா? களவெடாததைக் கண்டேனென்று சாட்சி சொன்னவனைப் போல ஆக்குகிறீரே ஒரு கூட்டத்தவரை.

திரா: பள்ளர், பறையர், நளவர், செம்படவர். நித்திய ஆசௌசமுடையவரெனச் சொல்லுவது போலவே கிறிஸ்தவன் இந்து மார்க்கத்தவரின் விரோதியெனச் சொல்வது ஓர்வித சூட்சி. கூட்டமென்றால் அயலில் பெண்கள் பிள்ளைகள் எல்லாரும் வந்து சேர்வர். ஒருவர் பிரேரிக்க மற்றவர் அனுவதிக்க எல்லாருங் கைதட்டுவர். காரியமறியார். உங்கள் மௌட்டீகமும் எங்கள் மௌட்டீகமும் அகலவேண்டுமென்பதே யெனது ஆசை அவசரத்திற் பிழையானவற்றைப் பேசி எழுதிவிடுவதால் மரியாதைக் குறைவுண்டாகும். இதினாலேதானே எழிய சாதிகளென்று சொல்லப்படுவது.

## தீண்டாமையைப்பற்றி மகாத்மாவின் கடிதம்

மகாத்துமாகாந்தியவர்கள் சிறைச்சாலையிலிருந்து சென்றமாசக்கடைசியிலெழுதியகடிதத்திற் சொல்லுவது:

"தீண்டாமை யென்பது தொடுகையினாற் தீட்டுப்படுதலென்று பொருள்படும். அது அனுசரிக்கப்படுமிடங்களிலெல்லாம் வீண் சடங்காசாரங்களே மார்க்கத்துக்குப்பதிலாய்க்கொள்ளப்பட்டுமார்க்கத்தைக் கெடுக்கின்றன. எல்லா ஆன்மாக்களும் ஒரே பொரு அக்கினிப்பிளம்பின் பொறிகளாயிருப்பதால், ஒருவரும் தீண்டாமையையுடையவர்களல்ல, மனுப்பிறவிகளைத் தீண்டத்தகாதோராய்ப் பாவிப்பதுபிழை. ஓர் பிரேதத்தைத் தொடுவதைப்பற்றித் தப்பான அபிப்பிராயங்கொள்வது சரியல்ல. ஓர் பிரேதத்தை தொட்டபின் அல்லது சவாஞ்செய்தபின் நாம் ஸ்நானஞ் செய்து கொள்வது சுகாதாரபிரமாணத்தின்படியேயன்றி வேறு நியாயத்தினாலல்ல. ஸ்நானஞ் செய்யாதவன். அசுத்தனேயன்றிப் பாவியல்ல. ஒருதாய் தன்பிள்ளையின் மலசலாதிகளைக் கையினாலெடுத்தால் அவள் தன் கைகளைக்கழுவும்வரையும் அல்லது ஸ்நானஞ் செய்யும்வரையும் தீண்டப்படத்தகாதவளாயிருக்கலாம். ஆனால் அவ்வேளை அவளுடையபிள்ளை விளையாட்டுக்கு அவளைத்தொட்டால் அப்பிள்ளை தீட்டுப்படுகிறதில்லை. ஆனால் சிலசாதியாரோ நன்றாய் ஸ்நானஞ்செய்தாலும் சுத்த வஸ்திரந்தரித்தாலும், பகவத்கீதையை படித்தாலும், உயர்ந்த உத்தியோகங்களில் இருந்தாலும் அவர்களுடைய பிறப்பின் நிமித்தம் தீண்டப்படத்தகாதோராய் மதிக்கப்படுகின்றனர். இது மார்க்கமல்ல. மார்க்கத்துக்கு முழுதும் மாறானது. இது அழியவேண்டும்.

தீண்டாமை யென்பது இந்துமார்க்கத்தைக்கெடுக்கிற பாவமான வீண் நம்பிக்கை. அதையழிக்கப் பிரயாசப்படவேண்டியது ஒவ்வொரு இந்துவினதுங்கடமை. இந்துக்களொவ்வொருவரும் அன்பின் ஆவியோடு "தீண்டப்படாதோ"ரைத்தீண்டி அவர்கள் அறியாமையிலிருந்து வெளியேறப் பொறுமையாய் உதவிசெய்தல் வேண்டும். மார்க்ககாரியததிற் தீண்டாமையகலும்போது லௌகீக விஷயங்களிலும் இராசாங்கவிஷயங்களிலும் தீண்டாமையின் பெறுபேறு அற்பமாகும். தீண்டாமையின் பிரிவுகளுக்கு முடிவில்லை. அதையனுட்டிப்போர்பூமிக்குப் பாரமாயிருக்கின்றனர். தீண்டாதாரோடு சிநேகமாயிருப்பது மாத்திரம் போதியதல்ல. நாம் எல்லா உயிர்களையும் எம் சொந்த உயிர்போல நேசிக்கவேண்டும்.

தீண்டாமையகற்றுதல் மனிதருக்கிடையிலும் பலபகுப்பாருக்கிடையிலுமிருக்குஞ் சுவரைத்தகர்ப்பதாகும். இச்சுவர்கள் உலகத்தினெல்லாப்பாகங்களிலுமுண்டு. அவற்றைப்பற்றி யெங்களுக்குக் கவ்வையில்லை. இந்தியாவிலேகோடிக்கணக்கான சனங்களை ஏறக்குறைய அடிமைத்தனத்தில் வைத்திருப்பதும் மார்க்கத்தோடடுத்ததென்று தவறாய்ச் சனங்கள் நினைத்திருப்பதுமான தீண்டாமையைப்பற்றியே நாம் விசேஷமாய்க் கவனித்தல்வேண்டும்."

### 50 வருடக் காதல்

73 வயதுடைய மெ . யேம்ஸ் ரென்வோல்ட் என்பவருக்கும் 69 வயதுடைய மிஸ் சாராள் பிறிங் என்பவவுக்கும் சிலநாட்களின்முன் இங்கிலாந்து தேசத்தில் விவாகம் நடைபெற்றது. கடந்த 50 வருடங்களாகக் காதலராயிருந்தபோதிலும் தன் தகப்பனையும், நோயாளியான தன் சகோதரியையும் காப்பாற்றி முடியுமவரையும் விவாகஞ்செய்வதில்லையென்ற அவளின் தீர்மானமே இவ்வித நீண்டகாலத்துக்கு விவாகத்தைப் பின்போட்டிருந்ததாம்.


## விளம்பரம்

### தந்தவைத்தியசாலை

### கண் வைத்தியமும்பல்வயித்தியமும்

காலை8 மணிக்கும் 12 மணிக்குமிடையிலும் பின்னேரம் 2 மணிக்கும் 5 மணிக்குமிடையிலும் பரிசோதனை செய்யப்படும். ஞாயிறும் புதனும் வெளியிடங்களுக்கு போய்ப்பார்த்துக் கொள்ளுவோம். கண்கண்ணாடி, கண்ணாடிப்பிறேம் கம்பிகள் முறிந்துபோனால் உடைந்துபோனால் தயவுசெய்து கீழேகாணப்படும் விலாசத்துக்கனுப்புங்கள். அருமையான "குறுக்லென்ஸ்" எனுங்கண்ணாடிகளும் பொன், றேல்ட்கோல்ட், வெள்ளி இவைகளாற் செய்யப்பட்ட கண்ணாடிப்பிறேம் கம்பிகளும் சீர்மையிலிருந்து வரவழைத்திருக்கிறோம்.

எந்தக் கண் வயித்தியருடைய ஏற்பாட்டின்படியும் கண்ணாடி கவனமாகச் செய்து கொடுக்கப்படும்.

சீர்மை மாதிரியாக பல்லுக்கட்டப்படும். நோவில்லாமற் பல்லுப்பிடுங்கப்படும்.

எஸ். சாள்ஸ் பத்திரனு,
உத்தரவுபெற்ற தந்த வைத்தியர்,
பெரியதெரு,
யாழ்ப்பாணம்.

## விளம்பரம்

### தேக்கு! தேக்கு!!

பர்மா தேக்குவியாபாரக்கம்பனி

அரியாத, அரிந்த தேக்குமரங்கள், பலகைகள், தளப்பலகை, நிலையன்னல்களுக்குரியமரம், கதவுச்சட்டம், தேக்கஞ்சிலாகை எதுவும் தேவையான அளவுகளில் கேட்டவுடனே அனுப்பப்படும். றெயிற் செலவு தள்ளி யாழ்ப்பாண விலைக்குக் குறையக் கொடுப்போம். ஒருமுறை ஓடர்செய்துபார்க்கவும்.

பர்மா தேக்குவியாபாரக் கம்பனி,
207, கிறன்ட் பாஸ் றோட்,
கொழும்பு.

Burma Teak Trading Company,
207, Grand Pass Road.
Colombo.

## விளம்பரம்

### முதிரை! முதிரை!!

இரண்டடி தொடக்கம் நாலடிவரை சுற்றளவுள்ளதும் 5 அடிக்குமேல் 10 அடிவரை நீளமுள்ளதுமான சிறு முதிரைமரங்கள் விலைக்கிருக்கின்றன

எனது வேலைச்சாய்ப்பிற் பார்க்கலாம்.

யோவேல போல்,
தெல்லிப்பழை.

## புதினக்குறிப்புகள்

(தொடர்ச்சி)

### தண்டனைக்குத்தப்பவில்லை.

அவிசாவலையைச் சேர்ந்த வடிவேல் என்பவன் இம்மாதம் 2 ம் திகதி மறியலிலிருந்து விடுதலை பெற்றான். 6 ம் திகதி தற்செயலாக நீர்கொழும்புப்பகுதியில் கட்டுநாயக என்ற கிராமச்சந்தையடியில் காருள் அகப்பட்டு உடனே மாண்டான்.

### கிழவனின் கள்ள நாய்.

புஞ்சி சிங்கோ என்ற 70 வயதுச் சிங்களக் கிழவன் தன் மருமகனைக் கொன்றதாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறான். நடுச்சாமத்தில் கொல்லும் சத்தத்தை அடுத்த அறையிற் படுத்திருந்த பேர்த்திப் பிள்ளை கேட்டு அதென்ன பாட்டா என்று வினவும்போது கள்ள நாயொன்றை அடிக்கிறேன் நீ படுத்துக்கொள் பேர்த்தி என்று சொல்லிவிட்டு காரியத்தை முடித்து வழவிற் குழிவெட்டி அவ்விரவிற்றானே புதைத்து விட்டானாம்.

### மோட்டர்கார் தேசமும் சேதமும்

அமரிக்கா ஐக்கிய மாகாணங்களில் மாத்திரம் 6989 ஆஸ்பத்திரிகளுண்டு. இவற்றில் சராசரி நோயாளிகள் 870993 உண்டாம்.

### தற்கொலை மலிந்த ஊர்

அவுஸ்திரேலிய கங்கேரியின் தலைநகராகிய வீயன்னாவில் நாளாந்தம் 28 பேர் வீதம் தற்கொலை செய்து மாண்டு போகின்றனராம். 1928ம் ஆண்டின் கணக்குப்படி வீயன்னா நகரத்தில் 28, 000 தற்கொலைகளும் தற்கொலை யெத்தனங்களும் நடந்ததாகச் சொல்லப்படுகிறது.

### உண்மைப் பேச்சு.

ருஷியாதேசத்தில் சேர்வியர் பகுதியினர் செய்யும் கொடுமைகள் நாளடைவில் அதிகரிக்கின்றன. சிலநாட்களுக்குமுன் ஒருவன் தன் மாமனையும், மாமியையும், மனைவியையும், கடைசியாக தன் குழந்தையையுங் கொன்று பிடிக்கப்பட்டான். குழந்தையைப்பற்றிச் சொல்லும் போது அவன் நீதவானைப்பார்த்து "அந்தப்பிள்ளை உதவாதவன். கோறை மரத்திலிருந்து நல்ல பலகை அரிய முடியாதே" என்று கூறினானாம்.

### ஆட்கள்

எம் தேசாதிபதியவர்களின் பாரியாராகியலேடி ஸ்ரான்லியவர்கள் சென்ற 12 ம் திகதி மறுபடியும் சேமமே இலங்கைக்கு வந்து சேர்ந்திருக்கிறா

இலங்கையின் புதிய சுப்பிறீம் கோட்டுப் பிரதம நீதிபதியவர்களாக நியமனம் பெற்ற சேர் P.J. மக்டோனல் அவர்கள் இம்மாதக்கடைசியில் இலங்கையைச் சேர்வாரென அறிகிறோம்.

வித்தியாபகுதி இன்ஸ்பெக்றர் மெஸ் சதாசிவ ஐயரவர்கள் மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மாற்றம்பெற்றிருக்கிறார்.

---

## "மடைத்தனமும் சீர்கேடுமானது" சாதிபேதத்தின் சிலம்பொலி

நாவாந்துறையில் திமிலருக்குள் நடந்த விவாகநேரத்தில் மேளவாத்தியத்தைச் சாதிபேத காரணமாய் ஒருபோதுமில்லாத வழக்கம் என்றுகூறி எதிர்த்த முக்குவர் சிலர் மேளவாத்திய லைசென்ஸ் கொடுக்கப்படாதென்று கொடுத்த பெட்டிசம் யாழ்ப்பாணக் கோட்டிற் தள்ளுப்பட்டு லைசென்ஸ் உத்தரவாக்கப்பட்டது. பெட்டிசனார் இத்துடனில்லாது நீதவானின் தீர்ப்புப் பழைய சாதியாசாரங்களுக்கு விரோதமென்று கொழும்புச் சுப்பிறீங்கோட்டுக்கு அப்பீல்செய்தனர். அப்பீல் தள்ளுப்பட்டுக் கோட்டுச் செலவுமிறுக்கும்படி தீர்த்த சுப்பிறீங் கோட்டு நீதிபதி ஜயவர்த்தன அவர்கள் இதன்பேரில் பின்வருமாறு கூறினர்:—

"இவ்வித சாதிபேதங்களுக்கும் சிறிய தன்மைகளுக்கும் இனிமேல் இடமில்லை என்பதைச் சனங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். பொலீஸ் உம் நியாயப்பிரமாணங்களும் தூக்கத்தி லிருப்பதினாற்தான் இவை தலைகாட்டுகின்றன. பிரமாணங்கள் இனிமேல் ஸ்திரப்படுத்தப்படவேண்டும். ஒரு சாதியின் இருபிரிவுகள் ஒன்றை ஒன்று எதிர்த்ததாய்த் தெரிகிறது. இதை யாழ்ப்பாணத்தில் விசாரித்த நீதவான் செய்த தீர்ப்பு மிகவுஞ் சரியானது. இக்காலத்திலும் இவ்வித சிறிய எழிப வாக்குவாதங்களும் குரோதங்களுமிருப்பது நம்பக்கூடியதல்ல. விவாகநேரத்திற்கு முந்தியும் பிந்தியும் அவ்வழியே போபவர்கள் மணக்கோலத்துடன் மாத்திரம் போகப்படாதென்று பிடிவாதமாய் நிற்பது மடைமை. பாதைக்கருகேயுள்ள வீடுகளில் மார்க்கதொழுதல் முதலிய எதுவும் நடைபெறும்போதன்றி வேறெவ்வித நேரத்திலும் பகிரங்க பாதையில் எவன் எவ்விதம் போனாலும் மற்றவன் தடுக்கமுடியாது. ஆகவே சீர்திருந்திய இந்நாட்டில் மடைத்தனமும் சீர்கேடுமான இத்தகைய மேட்டிமை எவ்விதத்திலும் இடம்பெறுதெனவறிக".

## கடிதம்

### "சமாசனம் என்பது நஞ்சாதிக்குப் பெருமையா"

1930ம் ஆண்டு ஆகஸ்ட் மீ வெளியான திராவிடன் பத்திரிகையில் "சமாசனம் என்பது நஞ்சாதிக்குப் பெருமையா". என்னுந் தலைநாமத்தின்கீழ் ஓர் வியாசம் வதிரி மாணவனால் எழுதப்பட்டது. இம்மாணவனின் வார்த்தைகள் பல பொருத்தமற்றன. ஆகையால் அதை எழுதியவர் உண்மையில் மாணவன் தானா அல்லது கையொப்பத்தளவில் மாணவனா என்பது சந்தேகம். இக்கால மாணவர் யாராயினும் இப்படியான குறுகிய புத்தியுடன் அரசாட்சிச் சலாக்கியங்களைக் கண்டிக்கத் துணியார். ஆயினும் அவரை ஒப்பத்தளவில் மாணவர் என்றே கொள்ளவேண்டும்.

இம்மாணவனின் வியாசத்தை நோக்குமிடத்து அது குறித்த ஒரு சிலரைக் கண்டிருக்கும் பொருட்டு, "தனக்கு மூக்குப்போனாலும் சத்துராதிக்குச் சகுனப்பிழை வரட்டும்." என்றபாண்மையாக எழுதப்பட்டதென்பது புலப்படும்.

1. "ஒரு பெண்ணைப் புருஷன் கவனியாது தன்பாட்டிற் சீவிக்கின்றான் எனக்கண்ட பெண் மௌனமாய் இருக்கப் பெண்ணுக்காக அனுதாபங் காட்டி நிற்கின்ற சிலரால் அப்பெண் புருஷன் மீது வழக்குத்தொடர அவன் இப்பெண்மீது முன்னரிலும் பன்மடங்கு பழியை அதிகரிப்பித்து விடுகின்றான்." என மாணவர் எழுதுகிறார். இந்நியாயம் உண்மையானதா? உண்மையானதானால் கோடுகளிலே தாபரியா வழக்கு விளங்கப்படுவதும் பிரிந்த குடும்பங்கள் பொருத்தப்படுவதும் வீணாகவும் பொய்யாகவும் இருக்கவேண்டும். இனி இன்று தொடக்கம் தாபரியா வழக்குத் தொடரவேண்டாம். இந்த மாணவ வேடத்தின் போதனையின்படி விடுங்கள்.

2. "சமாசனக்கொள்கை பரந்து கலகத்தை மூட்டிவிட்டதாம்". இக்கலகம் ஏற்பட்டது. உயர்ந்த சாதியாரால் அல்லாமல் மற்றவர்களால் அல்ல என்பதையும் அக்கலகம் உயர்ந்த சாதியாருக்கே அவமானத்தை ஊட்டியதென்பதையும் ஆங்கில பத்திரிகைகள் மூலம் அறிந்திருக்க வேண்டியது மாணவனின் கடனாகும்.

"ஒவ்வொரு கருமங்களும் உலக கடைக்கோட்டத்தின்படி முறைப்படி வருமல்லாமல் ஒருவர் பலர் கேள்விப்படி அன்றி கற்பனைப்படி மூண்பாடின்றி நடை பெறமாட்டாது. . . . ." என்றார் மாணவர்.

இக்கொள்கைப்படி பார்த்தால் இந்தியாவிலே காந்தி அடிகளும் அவர் தொண்டர்களும் உலக கடைக்கோட்டம் அறியாது, சுயராச்சியந்தானே வரும் என்பதை உணராதுசெயயும் முயற்சி வீண் என்றுதான் இந்தமாணவ வேடம் கூறக்கூடும்.

பொதுவாக உலகத்திலே கஷ்டத்தினூடாகவே நன்மை உண்டாகுமென்று பெரியோர் சொல்லுவார்கள். இது இம்மாணவனுக்கு மாறாயிற்று.

இம்மாணவனின் வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தால் மாணவன் தானே மூன்னடிச் சமாசன முயற்சிப்பட்டால் அல்லது சுயராச்சியக் கிளர்ச்சி செய்தால் அது சிறந்தது என்றும் வேறு யாராயினுந்தொடங்கி இருந்தால் கூடாது என்றும் சொல்லக்கூடும் என்று யூகிக்கலாம்.

4. "இந்தச் சமாசனப் பிரமாணத்தின் பின்பு உயர்ந்த வகுப்பார் மற்றவர்களை "தீட்டுச்சாதி—திண்டாச்சாதி' என்று பலவாறாக இழித்துச் சொல்லுகிறார்களாம். இதுவும புதுமையோ? இந்தச் சமாசனப்பிரமாணம் வரும் முன்னரும் இப்படிச் சொல்வது வழக்கந்தானே. சமாசனம் அங்கீகரிக்கப்பட்ட பின்னரும் இப்படி இழித்துக் கூறுவது நிசந்தானே. பகைவர்களை இகழ்வது உலக இயற்கைதானே. காந்தி மகானை அவருடைய எதிரிகள் இகழ்வது அனுபவந்தானே.

5. "சமாசனம் வேண்டும் என்று இரக்கின்றார்களாம்." இவ்வளவு காலமும் இரக்கவில்லை. மேல்சாதியார் வீடுகளிலே ஆசனந்தரும்படி இரக்கவில்லை. இது இரப்பு ஆகுமானால் பிள்ளை தாயை உணவுதரும்படி கேட்பதும் தாயினுடைய உரித்தைபபெற வாதாடுவது இரப்பு பிச்சை என்றுதான் மாணவன் எழுதுவான். கோட்டில் முறையிடுவதும் இரப்பாகும்.

6. சமாசனம் ஆருக்குப் பிச்சை என்றால் நஞ்சமயத்தில் நின்று நிலைபிரிந்து அந்நியப் பிரவேசஞ்செய்து சட்டையையும் போட்டுக்கொண்டால் சாதிபோய்விடும் என்று நினைக்கும் அவர்களுக்கே "பிச்சை" என்பது மாணவன் வாக்கு.

இம்மாணவன் தன்சமயம எதுவெனக் காட்டாதபடியாலும் இக்காலம் யாவரும் பலவித பலவர்ணச் சட்டைபோடுதல் வழக்கமாதலாலும் சட்டை இடுபவர்கள் எல்லாரும் சமயம் மாறினவர்கள் என்றே சொல்லவேண்டும். (இம்மாணவனும் மாறின சமயத்தவனேயாம்).

ஆதலால் இனி, பெண்களும் சட்டைபோடலாகாது. போட்டால் சமயம் மாறினவர்களாவார்கள். இச்சொற்கள் சட்டை பகிஷ்காரத்தால் எழுந்ததாகும். ஒருபோது — இவ்வாறு சமாசனத்தைக் கண்டித்து எழுதினால் மேல்சாதிகள் தன்னை வியப்பார்கள் என்று மாணவன் கருதிவிட்டாரோ. "கோடாலிக்காம்பு குலத்துக்கீனம்" என்பது பழமொழி "நாணலும் தன் வாயாற்கெடும்" வலியவந்த சீதேவியைக் காலால் உதையாதே.

கொழும்பு
Oct, 5, 1930.

இங்ஙனம்,
A, C, R.

## Mahatmaji's Weekly Letter

Gandhiji in his weekly letter from jail dwells on "Untouchability" He says:—

"Untouchability implies pollution by touch. Wherever it obtains, empty formalism replaces and corrupts religion. None can be untouchable, as all souls are sparks of one and the same fire. It is wrong to treat human beings as "Untouchables". It is wrong to entertain false scruples about touching a dead body. It is only out of considerations of health that we bathe after handling a dead body or after a shave. One who does not bathe may be looked upon as dirty, but not as a sinner. A mother may be untouchable so long she does not bathe or wash her hands and feet after handling the child's waste, but if the child touches her in play it will not be polluted by the touch. But Bhanjis and Chamars are looked down as untouchables from their birth, though they may bathe, put on well-washed clothes, read the Gita, and follow a learned profession. This is not religion, but rank irreligion, which deserves to be destroyed."

"Untouchability is a corroding, sinful superstition, which has infected Hinduism. It is the bounden duty of every Hindu to strive for its abolition. Every Hindu should atone for it by fraternising with the "untouchables" touching them in the spirit of love and service and helping them patiently to come out of their ignorance. When once the removal of "Untouchability" is visualised from this spiritual standpoint its material and political results sink into insignificance. Endless are the ramifications of "untouchability" and its votaries become a veritable burden to the earth. We must not merely make friends with "untouchables", but love all life as one's own self. The removal of "untouchability means the breaking down the barriers between man and man, between the various orders of being. We find such barriers erected everywhere in the world, but we are mainly concerned with "untouchability" which has been wrongly considered as having received religious sometime in India and reduced crores of human beings to a state bordering on slavery."

---


## SAVE MONEY!

AND MAKE ALL YOUR PURCHASE FROM US.

We are Direct Importers of Portland cement. Barbed Wire, Iron Bars, Expanded Metal, Galvanized Corrugated Roofing Sheets, Galvanized Plain Sheets. Asbetos Cement, Corrugated Roofing Sheets and Flat Sheets for ceiling and partitions and all other building materials.

We import all Hardware goods direct from England and the Continent and are threfore able to offer better prices than Local Dealers.

Please make your enquiries either from our Branch Office.

N. VAITILINGAM & Co.
Grand bazaar,
Jaffna.
or from us

N. VAITILINGAM & Co.
Estate Suppliers & Hardware Merchants.
31, Third Cross Street,
Colombo.

Telephone, 2266
Telegrams:—"Envaitilin".

---

## Notice

GOOD NEWS TO JAFFNA

Servant Problem solved at last.

If you require reliable Domestic Servants go to:

S. M. OLIVER & CO.,
1st Cross Street,
Jaffna.

Head Office,
285, Trincomalie Street,
Kandy.

Agents all over the Island.

## Dental Surgery

S. CHAS. PATIRANA

LICENSED DENTIST & MANUFACTURING OPTICIAN

MAIN STREET, JAFFNA

CONSULTATION HOURS, 8 A. M. TO NOON —2 P. M. TO 5 P. M (SUNDAYS AND WEDNESDAYS BY SPECIAL APPOINTMENTS.

When you break your spectacle frames, speck arms or lense of any pattern, please send them to the above address. They will be repaired accurately and promptly and also we have large supply and great variety of the most desirable kinds and styles of Crooke's lenses and best quality Rolled Gold and nickeled silver frames and other mountings directly imported from Europe.

Our charges are always uniform and reasonable and all eye doctors' prescription will be made carefully and accurately.

---

## THE WELL-KNOWN HOUSE FOR BRASS GOODS

All Reputable Builders and Contractors buy their supply from us. BRASS LOCKS, PADLOCKS. BRASS HINGES, BRASS BOLTS AND BRASS SCREWS

from

**Leading English, German and continental Makers**

**OUR QUALITY IS OuR GUARANTEE**

We have studied local demands and requirements and know as specialists should, what articles would suit out our numerous patrons.

**Our experience and knowledge is at their service FREE**

We import "PYRAMID BRAND" brass beds
made by the world celebrate makers
Both in point of quality and value
We can satisfy you

**JUST BUY ONE AND SEE IF WE CANNOT.**

A. L. M. ABDUL LATIFF,

Nos. 3,16, 130,, 3rd Cross Street,
Colombo.

PHONE, 1113. Telegrams "ALMAL".

---

## விளம்பரம்

கொழும்பு மூன்றாங்குறுக்குந் தெருவில் இருக்கும் எங்கள் சாப்பில்

வகைவகையான இரும்புச் சாமான்கள் பித்தளைச் சாமான்கள், இரும்புக்கம்பிகள், பித்தளைக்கம்பிகள், ஈயக்கம்பிகள், மண்வெட்டி, பிக்கான்வகைகள், அலவாங்குகள். இரும்புப்பூட்டுவகைகள், பித்தளைப்பூட்டுவகைகள், லாச்சிப்பூட்டுகள், பெட்டிப்பூட்டுகள், எண்ணைவகைகள், மைவகைகள், வாணிசுவகைகள், இரும்புக்கட்டில்கள், பித்தளைக்கட்டில்கள், பிணைச்சல்வகைகள், திறாங்குவகைகள், வீட்டுக்கட்டிடத்துக்கு வேண்டிய புதுவிதமான சகலதினிசுகளும் மிக உயர்ந்த இனமான குறைந்த இனமான சகல சாமான்களும் சில்லறையாகவும் தொகையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்திலுள்ள கடைகளுக்குங் கொந்திறாத்துக் காரருக்கும் கொடுக்கும் விலையில் சில்லறைக்கு உடனே அனுப்பி வைப்போம்.

### ஒருமுறை எழுதிப்பாருங்கள்

அமெரிக்கா, இங்கிலாந்து, சேர்மனி, யப்பான் முதலிய இடங்களிலிருந்து நேரே அழைப்பிக்கிறோம்.

சகலவிதமான கண்ணாடிகளும் நிறக்கண்ணாடிகளும் வேண்டிய இனத்தில் வேண்டிய அளவில் பெற்றுக்கொள்ளலாம். ஓடர்செய்த அடுத்த நாளில் சாமான்கள் கையிலிருக்கச்செய்வோம்.

விலாசம்.

ஏ. எல். எம், அப்துல் லாத்திவ்
3. மூன்றாம்குறுக்குத்தெரு,
கொழும்பு.


---

Printed by Mr. C. K. Yesuthason at the A. C. M. Press, Tellippalai Edited and published by Mr. Joel Paul, Building Contractor, (Secretary, the Jaffna Depressed Tamils' Service League) on behalf of the Service League at Tellippalai.